Written by Administrator
Saturday, 01 August 2009 11:55 -

□□□□□□□□ **01.08.2009**

விழுப்புரம் பஸ் நிலையம் முன்மாதிரியாக மாறும்

சேர்மன் ஜனகராஜ் உறுதி

விழுப்புரம் ஆக.1–

விழுப்புரம் நகர மன்ற அவசரக் கூட்டம் தலைவர் ஜனகராஜ் தலைமையில் நேற்று நடந்தது.

கூட்டம் துவங்கியதும் சாலை விபத்தில் இறந்த கவுன்சிலர் இளமதிக்கு இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப் பட்டது.

தொடர்ந்து பல்வேறு பணிகளுக்கான 95 தீர்மானங்கள் மன்ற ஒப்புதலுக்காக வாசிக்கப்பட்டது. கூட்டத்திற்கு பின் சேர்மன் ஜனகராஜ் நிருபர்களிடம் கூறியதாவது:

நகராட்சியில் 88 இ.மீ., தூரத்திற்கான பாதாள சாக்கடை பணிகள் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் துவங்கியது. 60 இ.மீ., பணி முடிவடைந்து, 28 இ.மீ., மட்டுமே பாக்கி உள்ளது. 2010ம் ஆண்டு செப்டம்பரில் இட்டமிட்டபடி முடிவடைய வேண்டிய பணிகள் முன்னதாகவே முடிவடையும்.

இதுவரை தனியார் பராமரிப்பில் இருந்து வந்த புதிய பஸ் நிலையம் இன்று (நேற்று) முதல் நகராட்சி முழு கட்டுப்பாட்டில் வருகிறது.

அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தி, சுகாதாரமான, முன்மாதிரி பஸ் நிலையமாக நாம் உயர்த்தப்பட உள்ளது. அனைத்துவிதமான ஆக்கிரமிப்பும் அகற்றப்படும். பஸ் நிலையத்தில் ஊழியர் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்படும்.

ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான மின் மயான கழுகாடு கட்டி முடிக்கப்பட்டு விரைவில் இறக்கப்பட இருக்கிறது. இந்த கழுகாடு ஒரேயடி தர சான்று பெறவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

விழுப்புரம் நகராட்சியில் பல கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சிப் பணிகள் அமைச்சர் பொன்முடி ஆலோசனைப்படி நடந்து வருகிறது.

இவ்வாறு சேர்மன் ஜனகராஜ் கூறினார்.